சொல்லும்போது இதுபோன்ற மாறுபாடுகள் ஏற்படுவதுண்டு. ஆயினும் இந்த இரண்டு பெயரும் பொருத்தமாக இல்லை, நன்ருகவும் இல்லை. ஆகையால் அரசாங்கம் மாற்றியமைக்க வேண்டும்; மாற்றியமைக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஏற்கெனவே இருக்கும் பெயரை மாற்றுவது பொருத்தமுடையதாக இருக்காது என்று கருதுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பொருத்தமாக இருக்காது என்று கருதுவதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்தப் பெயரை 'மதிகெட்டான்' என்று இருப்பதை மாற்றி அமைத்துவிடலாம். அதற்கு யாரும் எதிர்ப்பு தெரிவிக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன்.

தொப்பையாறு அணைக்கட்டுத் திட்டம்

* 576 **வினு—திரு. எம். பரமசிவம்:** மாண்புமிகு பொதுபணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா :—

தொப்பையாறு அணைக்கட்டும் திட்டம் எந்நிலையிலுள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தொப்பையாறு அணைக்கட்டுத் திட்ட அமைப்பும் மதிப்பீடும், திருச்சிராப்பள்ளி ஆய்வு மேற்பார்வைப் பொறியாளரால் மறுஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. திட்டம் முடிவாகப் பரிசீலிக்கப்பட்டதும் முழுக் குறிப்புகள் தெரியவரும்.

பல்லடம் சாலை, ஈஸ்வரன் கோயில் சாலை சந்திப்பு

* 577 **வினு—திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா :—

திருப்பூர் நகரில் உள்ள பிரதான சாலையான பல்லடம் ரோடும், ஈஸ்வரன் கோயில் சாலையும் சந்திக்கும் இடத்தில் சாலையை விரிவுபடுத்தும் உத்தேசம் ஏதேனும் பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

திரு. சு. துரைசாமி : தலைவரவர்களே, அந்தப் பாதை மிகக் குறுகலாக இருப்பதன் காரணமாகப் போக்குவரத்திற்கு மிகவும் இடைஞ்சலாக இருக்கிறது. எனவே, அதை அகலப்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற சாலை இப்போது 42 அடி அகலம் இருக்கிறது. சாலைக்கு இருபக்கங்களிலும் கட்டடங்கள் இருப்பதால் மேற்கொண்டு விஸ்தரிப்பதற்கு வாய்ப்பில்லை என்று கூறிக் கொள்கிறேன்.

1971 டிசம்பர் 18]

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, திருப்பூரில் பல்லடம் ரோட்டில் கலாபத்தூர் கிராமத்தில் ஒரு பள்ளமான பகுதி இருக்கிறது. மழைக் காலத்தில் ஏராளமாகத் தண்ணீர் வருகின்றபோது, அங்கே தண்ணீர் தேங்கி போக்குவரத்துத் தடைப்படுகிறது. எனவே அந்த இடத்தில் ஒரு பாலம் கட்டுவதற்கு அரசாங்கம் முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: உறுப்பினர் குறிப்பிட்டது மூலக் கேள்வியோடு தொடர்பு இல்லாமல் இருக்கிறது. இருப்பினும் அவரது கோரிக்கை கவனிக்கப்படும்.

(சில உறுப்பினர்கள் அங்குமிங்கும் போய்க்கொண்டிருந்தனர்.)

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்: யார் கேள்வி கேட்பது, யார் பதில் சொல்வது என்று தெரியவில்லை. ஆகவே உறுப்பினர்கள் கேள்வி நேரத்தில் அவரவர் இடத்தில் இருப்பது நல்லது.

சிங்காநல்லூரில் மனைவள வங்கி

***578. வினா—திரு. ஏ. சுப்பிரமணியம்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கோவை மாவட்டத்திலுள்ள சிங்காநல்லூர் நகரத்தில், மனைவள வங்கியொன்று அமைத்திட தொடக்க வேலைகள் முடிக்கப்பட்டு, அத் திட்டம் அரசின் அனுமதிக்காக அனுப்பி வைக்கப் யளிப்பாரா :—

(இ) ஆம் எனில், எப்பொழுது?

(உ) அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) முதல் (உ) வரை கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள சிங்காநல்லூர் நகரத்தில் மனைவள வங்கி யொன்று அமைக்கும் திட்டத்திற்கு ஆணை எண் 464, கூட்டுறவு, 31—10—1970 தேதியில் அரசு அனுமதி அளிக்கப்பட்டது.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, அந்த வங்கியினுடைய தலைவராக யாரையாவது நியமித்திருக்கிறார்களா? அப்படியானால், யார் தலைவர் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே. அந்த வங்கிக்குத் தலைவர் நியமிக்கப்பட்டு, 23—8—1971-லேயே வங்கி செயல்படத் தொடங்கிவிட்டது. தலைவர் பெயர் தெரியவில்லை.